23.2.2022
அசல் வழக்கு எண்: 271/2016

வா.சா.1 சாட்சி மகாலிங்ககார்த்திக் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி
ஆரம்பித்த நேரம்– 1.45P.M.

நான் சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது மாவட்ட வருவாய் அதிகாரி (கோவில் நிலங்கள்) உத்தரவை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் மாவட்ட வருவாய் அதிகாரி (கோவில் நிலங்கள்) பட்டாவை ரத்து செய்ததால் அவர் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அவர் மீதும் மற்றும் 4 அதிகாரிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளோம். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே தீர்ப்புரை தாக்கல் செய்துள்ளோம். நான் எத்தனை இலக்க சொத்திற்கு வழகது தாக்கல்செய்துள்ளேனா என்று கேட்டால் 1 இலக்க சொத்திற்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தான அமச்சியாரம்மன் கோவிலில் பூசாரியாக உள்ளேன் என்று சொன்னால் சரிதான். அமச்சியாரம்மன் கோவிலுக்கு நான் பூஜை ஊழியம் செய்து வருவதால் அந்த ஊழியத்திற்காக எனக்கு இனாமாக தாவா சொத்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திலிருந்து வரும் வருமானத்தை வைத்து அமச்சியாரம்மன் கோவில் பூஜைகளை நான் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை நான் வில்லங்கம் மற்றும் விற்பனை செய்வதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தற்போது வரை விற்கவில்லை. எனக்கு தாவா சொத்தை விற்பதற்கு உரிமை இல்லாத பட்சத்தில் அமச்சியாரம்மன் தெய்வத்திற்குதான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாளது தேதியில் அமச்சியாரம்மன் கோவில் பெயரில் பட்டா தாவா சொத்திற்கு உள்ளது என்று சொன்னால் சரிதான் அதை ரத்து செய்து பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பாத்தியப்படாத சொத்தின் மீது என் பெயருக்கு பட்டா கோருவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் தவறு. பாத்தியமுள்ளது. மகாலிங்கம் பண்டாரம் என்பவர் யார் என்று கேட்டால் எனது தாத்தா ஆவார். சோமசுந்தரம் பண்டாரம் என்பவர் யார் என்று கேட்டால் மகாலிங்கம் பண்டாரத்திற்கு பெரியப்பா மகன் ஆவார். நான் மகாலிங்கம் பண்டாரம் வாரிசா அல்லது சோமசுந்தரம் பண்டாரம் வாரிசா என்று கேட்டால் மகாலிங்கம் பண்டாரம் வாரிசு ஆவேன். சோமசுந்தரம் பண்டாரம் வாரிசுகள் உள்ளார்களா என்று கேட்டால் உள்ளார்கள். சோமசுந்தரம் பண்டாரத்தின் வாரிசுகள் யார் யார் என்று கேட்டால் சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம் ஆவார்கள். எனது தாத்தா கருப்பண பண்டாரத்திற்கு மகாலிங்கம் பண்டாரம் ஒரே வாரிசு

ஆவார். மகாலிங்கம் பண்டாரத்திற்கு எனது அப்பா ஒரே வாரிசு ஆவார். எனது அப்பா ஒரே வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம் ஆகியோர்கள் சோமசுந்தர பண்டாரத்தின் வாரிசுகள் என்பதை காண்பிப்பதற்கு வாரிசுசான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் என்ன என்று கேட்டால் பட்டா ஆகும். வா.சா.ஆ.1 ஆவணம் செட்டில்மெண்டில் கொடுத்த பட்டா அல்ல என்றும் அது அனுபவத்திற்காக கொடுக்கப்பட்ட அனுமதி என்றால் சரியல்ல. அது பட்டா ஆகும். மானிபம் நிலத்தை மாற்றி இரயத்துவாரி பட்டா கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் மனு கொடுக்கபோய்தான் பட்டா கொடுத்துள்ளார்கள். ஊழிய மானிப நிலத்தை ரத்து செய்து இரயத்துவாரி நில பட்டாவாக ஏற்படுத்த ஏதேனும் உத்தரவு கொடுத்துள்ளார்களா என்று கேட்டால் கொடுத்துள்ளார்கள். நான் மானிப நிலத்தை இரயத்துவாரி நில வகைப்படாக மாற்ற கேட்டு வழக்கோ, மனுவோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 எனக்கு வழங்கப்பட்ட இரயத்துவாரி பட்டா அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு தனிப்பட்ட பாத்தியத்தை கொடுக்காது என்று சொன்னால் சரியல்ல. என் முன்னோர்களுக்கு வழி வழியாக வந்த பட்டா வா.சா.ஆ.1 ஆகும். தாவா சர்வே எண். 147/6 நிலத்தை என்னுடைய அப்பாவும், கல்யாணசுந்தரம் அப்பாவும் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சர்வே எண். 147/6 நிலத்தை என்னுடைய தாத்தாவும், கல்யாணசுந்தரம் வகையறாவும் பாகம் பிரித்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் உண்டா என்று கேட்டால் இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா பாஸ் புத்தகத்தை 2000 ல் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். தனித்தனியா பட்டா பாஸ் புத்தகமாக மாற்றுவதற்கு தாசில்தாரிடம் ஏதேனும் பிரிவினை ஆவணங்களை காண்பித்தோமா என்று கேட்டால் செட்டில்மெண்ட் பட்டாவை காண்பித்துதான் தனித்தனியாக பட்டா பாஸ் புத்தகம் வாங்கினோம். செட்டில்மெண்ட் தாசில்தார் தனித்தனியாக பட்டா வழங்கினாரா என்று கேட்டால் தனித்தனி பட்டா கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணமான பட்டாக்கள் தவறான பட்டாக்கள் என்றால் சரியல்ல. 147/6A யாருக்கு 147/6B யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 147/6A கல்யாணசுந்தரத்திற்கும், 147/6B என் தகப்பனார் பாண்டி பூசாரிக்கும் ஒதுக்கப்பட்டது. 147/6B யில் கல்யாணசுந்தரத்திற்கோ அவர் மக்களுக்கோ பாத்தியம் இல்லை என்றால் கொஞ்சம் பாத்தியம் உள்ளது. 147/6B யில் எனக்கு எவ்வளவு பாத்தியம், கல்யாணசுந்தரத்திற்கு எவ்வளவு பாத்தியம் என்று கேட்டால் 1 ஏக்கர் 36 செண்டு எங்களுக்கு பாத்தியம், கல்யாணசுந்தரத்திற்கு 46 செண்டு பாத்தியம். நான் சொல்லும் கணக்கு தவறு என்றும் அதனால் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ரசீதுகள் எந்த பட்டாவிற்கு உள்ளது என்று கேட்டால் சர்வே எண்.147/6B க்குரியது. வா.சா.ஆ.6 கிஸ்தி ரசீதுகள் தாவா சொத்திற்கு எங்களுக்கு பாத்தியத்தை கொடுக்காது என்று

சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தில் அமச்சியார் மானிபநிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் கடைசி காலத்தில் இனாம் விபரம் என்ற காலத்தில் அமச்சியாரம்மன் என்றும் அனுபவதாரரும், உத்தியோகமும் என்ற தலைப்பில் மகாலிங்க பண்டாரம், சுந்தர பண்டாரம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள நிலம் அனைத்தும் அமச்சியாரம்மனுக்கு மானிபமாக கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல எங்களுக்கு பூஜை ஊழியத்திற்கு கொடுக்கப்பட்ட நிலம். வா.சா.ஆ.7 ஆவணத்தில் 5 இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 147/6B யை தவிர மற்ற 4 அயிட்ட நிலங்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று கேட்டால் இதுவரையிலும் நான் பார்க்கவில்லை. சாட்சி தற்போது மற்ற 4 அயிட்டத்திற்கு பட்டா அமச்சியாரம்மன் கோவில் டிரஸ்டி என போடப்பட்டுள்ளது. மற்ற 4 அயிட்டத்திற்கு நாங்கள் செட்டில்மெண்ட் மனு கொடுத்து பட்டா வாங்கினோமா என்று கேட்டால் தெரியவில்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி தாவா சொத்தானது அமச்சியாரம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமான அடங்கல் என்பது தாவா சொத்திற்கு உரிமை உடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.9 வில்லங்க சான்றிதழ் எதற்காக போட்டுள்ளேன் என்று கேட்டால் வில்லங்கம் இல்லை என்பதை காண்பிப்பதற்காக போட்டுள்ளேன். வா.சா.ஆ.9 ஆவணமான வில்லங்கத்தில் மாயாண்டித்தேவர், மாயக்காளுக்கு 3 வருடத்திற்கு நிலத்தை ஒத்தி வைத்ததாக வில்லங்கம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்து விட்டது. கோவில் சொத்தை மாயாண்டித்தேவர், மாயக்காளுக்கு ஒத்தி வைக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான். செட்டில்மெண்ட் மூலமாக பட்டா வாங்கியது எப்போது என்று கேட்டால் 1976 ம் வருடமே செட்டில்மெண்ட் பட்டா கொடுத்து விட்டார்கள். 1976 ம் ஆண்டு கொடுத்த செட்டில்மெண்ட் பட்டா கொடுத்த பின்பு கோவிலுக்கோ, இந்து அறநிலையத்துறைக்கோ எந்த உரிமையும் தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். உரிமை இல்லாத போது 1988 ஆண்டு இந்து அறநிலையத்துறையிலிருந்து வா.சா.ஆ.10 ஆவணமான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றும் அந்த அறிவிப்பு தாவா இடத்துக்கும் சேர்த்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல தாவா சொத்திற்கு சேர்த்து அல்ல. அந்த அறிவிப்பில் தாவா சொத்தை காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 05.03.1988 பத்திரத்தில் எந்த சொத்தும் காண்பிக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணமான தாசில்தார், தனி அலுவலர் இந்து அறநிலையத்துறைக்கு எழுதிய கடிதத்தில் சேர வேண்டிய பாக்கி குத்தக தொகையை வசூல் செய்திட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் வா.சா.ஆ.10 ல் சர்வே எண்.147/6 சேரவில்லை. மேற்கண்ட சர்வே எண்.147/6 க்கு செட்டில்மெண்ட் தாசில்தார் நடவடிக்கைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.10 ல் தாவா சொத்தான சர்வே எண்.147/6 சேராததால் எனக்கு தாவா

சொத்தில் பாத்தியம் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1967 ல் வா.சா.ஆ.11 மூலம் பூசாரி மகாலிங்க பண்டாரம், சுந்தரபண்டாரம், சக்கரை ஆகியோர்கள் முத்துசாமி தேவர், முத்துதேவர், கோடாங்கி சின்னன், பெரியசாமி மற்றும் பாண்டி ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 1967 ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கில் அமச்சியாரம்மன் கோவிலோ, அரசாங்கமோ தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். 1967 ம் ஆண்டு தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று கேட்டால் கோவிலுக்கு பாத்தியப்பட்டது. 1967 ம் ஆண்டு வழக்கின் தீர்ப்பு இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12 மேல்முறையீடு தீர்ப்பில் வா.சா.ஆ.11 தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 மேல்முறையீட்டு தீர்ப்பில் வா.சா.ஆ.11 தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து அனுபவ உரிமை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாவா சொத்து முத்துசாமி தேவர் ஆக்கிரமித்து வந்து அதை ஒப்படைக்க சொல்லிதான் வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். நானும் பூசாரி ஸ்தானத்தில் வா.சா.ஆ.16 மூலம் ஒப்படைப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணமானது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 என்பது மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின் படி விசாரணை மேற்கொண்ட செட்டில்மெண்ட் தாசில்தாரின் தாவா சொத்தின் நடவடிக்கையின் மீது உயர்நீதிமன்றத்தில் தரப்பட்ட தடை ஆணை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ரிட் மனுவின் தீர்ப்பாணை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில் எங்களுக்கு பாத்திய உரிமை இல்லை என்றும் அனுபவ உரிமை மட்டும்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.17 பட்டா 2007 ல் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.17 பட்டா தவறானது என்றும் அது எவ்விதத்திலும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.18, வா.சா.ஆ.19 அடங்கல்கள் எனக்கு எவ்விதத்திலும் பாத்திய உரிமை கொடுக்காது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.20 மாவட்ட வருவாய் அதிகாரி கொடுத்த உத்தரவில் தாவா சொத்தை அமச்சியாரம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று உத்தரவு செய்து தாவா சொத்தை கோவில் பெயருக்கு மாற்றி உத்தரவு போட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆவணத்தை சரிபார்க்காமல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கையில் வழக்கறிஞர் வைத்து எதிர் வாதுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.20 உத்தரவில் மேல்முறையீடு செய்து ST petition.102/1980 உத்தரவானது ரத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவு, நான் சொன்ன வாதங்கள், ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அதிகாரி(கோவில் நிலங்கள்) போட்ட உத்தரவு செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உத்தரவு செல்லாது என கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.20 உத்தரவானது சரியான முறையில் விசாரித்து சட்டத்திற்கு உட்பட்டு உத்தரவு

வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 வாரிசு சான்றிதழில் எனது தம்பி கடற்கரை எனது தகப்பனாரின் 6 வது வாரிசாக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பெண் வாரிசுகளை இந்த வழககில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சட்டப்படி விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.13 உயர்நீதிமன்ற உத்தரவுப்படி எனக்கு அனுபவபாத்தியம் மட்டும் கொடுத்துள்ளதால் நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. கோவில் பெயரில் உள்ள பட்டாவை எனது பெயருக்கு மாற்றி கொடுக்க சொல்லி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளபடி செய்ய வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதனால் மாவட்ட வருவாய் அதிகாரி ஏற்படுத்திய பட்டா மாறுதல் உத்தரவு செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

முடிந்த நேரம் – 5.5P.M.